**செ. கு. எண்**:265 **நாள்**:20-12-2011.

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 20 .12. 2011

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், ஆலம்பட்டி கிராமம், அங்கன்வாடி மையத்தில் பயின்று வந்த திரு. சுப்பிரமணி என்பவரது மகள் கனகலட்சுமி, திரு. மாணிக்கம் என்பவரது மகள் அபிநயா மற்றும் சுப்பிரமணியபுரத்தைச் சேர்ந்த திரு. ராஜா என்பவரின் மகள் சௌமியா ஆகிய மூன்று குழந்தைகளும் அங்கன்வாடி அருகில் உள்ள இரண்டு கிணறுகளில் தேங்கி கிடந்த அசுத்தமான நீரினால் உற்பத்தியான கொசுக்களின் மூலம் காய்ச்சல் ஏற்பட்டு, கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி, குழந்தை சௌமியா **7.12.2011** அன்றும், குழந்தை கனகலட்சுமி **10.12.2011** அன்றும், குழந்தை அபிநயா **18.12.2011** அன்றும் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இத்துயர சம்பவத்தில் அகால மரணமடைந்த குழந்தைகள் சௌமியா, கனகலட்சுமி மற்றும் அபிநயா ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குழந்தைகள் செளமியா, கனகலட்சுமி மற்றும் அபிநயா ஆகியோரை இழந்து வாடும் அவர்கள் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், பருவமழைக்குப் பின் ஏற்படும் நோய்களைத் தடுக்க ஆங்காங்கே தேங்கியுள்ள மழை நீரை அப்புறப்படுத்துமாறும், கொசுக்கள் மூலம் பரவும் காய்ச்சலை தடுக்க உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**